பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை - 4
27-08-2025 WEDNESDAY 12 40 PM
ஆகாஷ்வாணி - செய்திகள்

தலைப்புச் செய்திகள்

1) நாட்டின் பாதுகாப்பு தொடர்பான அனைத்து வகையான சவால்களையும் எதிர்கொள்ளும் வகையில், பாதுகாப்புப் படையினர் தயாராக இருக்க வேண்டும் என்று மத்திய அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங் கூறியுள்ளார்.

2) காஸா பகுதியில் ஊடகவியலாளர்கள் கொல்லப்பட்டது அதிர்ச்சியளிப்பதாக உள்ளது என்று வெளியுறவு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

3) தேசிய கல்விக் கொள்கையை பிரதிபலிக்கும் வகையில் தமிழக அரசின் புதிய கல்விக் கொள்கை அமைந்துள்ளதாக மத்திய இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் தெரிவித்துள்ளார்.

4) பாதுகாப்பு கவுன்சிலில் மேற்கொள்ளப்பட வேண்டிய சீர்திருத்தம் குறித்த பேச்சுக்களை ஐ.நா. பொதுச்சபை ஒத்தி வைத்துள்ளது கண்டனத்திற்குரியது என்று ஜப்பான் தெரிவித்துள்ளது.

5) உலக பேட்மிண்டன் சாம்பியன் போட்டியில் இந்தியாவின் எச்.எஸ். பிரணாய், பி.வி. சிந்து ஆகியோர் இரண்டாவது சுற்றுக்கு முன்னேறியுள்ளனர்.

>>>>><<<<<

நாட்டின் பாதுகாப்பு தொடர்பான அனைத்து வகையான சவால்களையும் எதிர்கொள்ளும் வகையில், பாதுகாப்புப் படையினர் தயாராக இருக்க வேண்டும் என்று மத்திய அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங் தெரிவித்துள்ளார்.

மத்தியப்பிரதேச மாநிலம், *Mhow* நகரில் உள்ள ராணுவக் கல்லூரியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் இன்று பேசிய அவர், ஒரு போர் எவ்வளவு காலம் நீடிக்கும் என்று தீர்மானிக்க முடியாத சூழல் தற்போது நிலவுவதாக கூறினார்.

கடந்த பத்தாண்டுகளாக பாதுகாப்பு துறையில், நாடு விரைவான முன்னேற்றத்தை கண்டு வருவதாகவும், அதற்கான உதாரணமாக ஆப்பரேஷன் சிந்தூர் திகழ்வதாகவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

நமது பாதுகாப்புப் படைகள் வேகமாகவும், துணிச்சலாகவும் செயல்பட்டு, பாகிஸ்தானில் உள்ள தீவிரவாத அமைப்புகளின் கட்டமைப்புகளை அழித்ததாக அவர் தெரிவித்தார்.

பாதுகாப்பு துறையில் சுயசார்பினை எட்டுவதற்கான முக்கியத்துவத்தை ஆப்பரேஷன் சிந்தூர் உணர்த்தியிருப்பதாகவும் திரு. ராஜ்நாத் சிங் கூறினார்.

>>>>><<<<<

காஸாவுக்கு அருகே *Khan Younis* பகுதியில் இஸ்ரேல் படையினர் நடத்திய தாக்குதலில், ஊடகவியலாளர்கள் கொல்லப்பட்டது மிகுந்த அதிர்ச்சியளிப்பதாக உள்ளது என்று வெளியுறவு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

புதுதில்லியில் செய்தியாளர்களிடம் பேசிய வெளியுறவுத்துறை செய்தி தொடர்பாளர் திரு. ரன்தீர் ஜெய்ஸ்வால், இருதரப்புக்கு இடையேயான மோதலில் பொதுமக்கள் உயிரிழந்ததற்கு இந்தியா கண்டனம் தெரிவித்து வருவதாக கூறியுள்ளார்.

மேலும், இதுதொடர்பான விசாரணையை இஸ்ரேல் மேற்கொண்டு வருவதாகவும் திரு. ரன்தீர் ஜெய்ஸ்வால் குறிப்பிட்டுள்ளார்.

>>>>><<<<<

தேசிய கல்விக் கொள்கையை பிரதிபலிக்கும் வகையில் தமிழக அரசின் புதிய கல்விக் கொள்கை அமைந்துள்ளதாக தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் தெரிவித்துள்ளார்.

சென்னையில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், இதனை தெரிவித்தார்.

(சவுண்ட் பைட் – எல். முருகன் 38 செகண்ட்ஸ்)

>>>>><<<<<

கனமழை மற்றும் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ள ஜம்முவில் மின்சாரம், நீர் விநியோகம், தொலைபேசி சேவைகளுக்கு உடனடி முக்கியத்துவம் அளித்து, மறுசீரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக மத்திய இணையமைச்சர் டாக்டர் ஜிதேந்திர சிங் தெரிவித்துள்ளார்.

தமது சமூகவலைதளப் பக்கத்தில் இதனை தெரிவித்துள்ள அவர். ஜம்மு கஷ்மீர் நிர்வாகத்துடன் இணைந்து தேசிய மற்றும் பேரிடர் மீட்புப் படையினர், ராணுவம், விமானப்படை, துணை ராணுவப் படையினர் தொடர்ந்து மீட்புப் பணிகளில் ஈடுபட்டு வருவதாக கூறியுள்ளார்.

அங்குள்ள Chenab நதியில் வெள்ளம் அபாய அளவை தாண்டியுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

இதனிடையே, பொதுமக்கள் பாதுகாப்பாக வீடுகளுக்குள் இருக்குமாறும், தேவையின்றி வெளியில் நடமாட வேண்டாம் என்றும் ஜம்மு கோட்ட ஆணையர் திரு. ரமேஷ் குமார் கேட்டுக் கொண்டுள்ளார்.

மேலும், ஜம்மு கஷ்மீரில் ஏற்பட்டுள்ள பெருமழை மற்றும் வெள்ளப்பாதிப்பு நிலவரம் குறித்து பிரதமர் திரு. நரேந்திர மோடி தொடர்ந்து கேட்டறிந்து வருவதாக அவர் தெரிவித்துள்ளார்.

இதற்கிடையே, ஜம்மு மாவட்டத்தில் வெள்ளத்தில் சிக்கிய 3 ஆயிரத்து 500 பேர் பத்திரமாக மீட்கப்பட்டுள்ளதாக அம்மாவட்ட நிர்வாகம் தெரிவித்துள்ளது.

Reasi மாவட்டத்தில் மாதா வைஷ்ணவி தேவி கோவிலுக்குச் செல்லும் வழியில் நேரிட்ட நிலச்சரிவில் சிக்கி 30 பேர் உயிரிழந்தனர். 14 பேர் காயமடைந்தனர்.

இந்த விபத்தில் உயிரிழந்தோரின் குடும்பத்தினருக்கு மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா, ஜம்மு கஷ்மீர் துணை நிலை ஆளுநர் திரு. மனோஜ் சின்ஹா, முதலமைச்சர் திரு. உமர் அப்துல்லா உள்ளிட்டோர் இரங்கல் தெரிவித்துள்ளனர்.

இந்நிலையில், இன்று அங்கு நடைபெறவிருந்த காவலர் பணிக்கான தேர்வை ஒத்தி வைத்திருப்பதாக எல்லை பாதுகாப்புப் படை தெரிவித்துள்ளது.

>>>>><<<<<

பஞ்சாபின் Madhopur அருகே வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட கட்டிடத்தில் சிக்கித் தவித்த மத்திய ரிசர்வ் காவல்படை வீரர்கள் மற்றும் பொதுமக்கள் ராணுவ ஹெலிகாப்டர் மூலம் மீட்கப்பட்டனர்.

சவாலான வானிலை மற்றும் அபாயகரமான வெள்ளம் சூழ்ந்த நிலையில், ராணுவத்தினர் துணிச்சலாக செயல்பட்டு, இந்த மீட்புப் பணிகளை மேற்கொண்டதாக ராணுவ அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

>>>>><<<<<

ஆகாஷ்வாணியின் செய்திப்பிரிவில் பணியாற்றி வந்த இந்திய தகவல் பணி மூத்த அதிகாரி விவேக் குமார் கவுர் புதுதில்லியில் இன்று காலமானார், அவருக்கு வயது 59.

1992ஆம் ஆண்டு பிரிவு இந்திய தகவல் பணி அதிகாரியான அவர், சிக்கிம் மாநிலம், Gangtok-ல் உள்ள மண்டல செய்திப் பிரிவில் பணியில் சேர்ந்தார்.

களவிளம்பர இயக்குநரகம், பத்திரிகை தகவல் அலுவலகம் உட்பட பல்வேறு பிரிவுகளில் விவேக் குமார் கவுர் பணியாற்றியுள்ளார்.

>>>>><<<<<

விநாயகர் சதுர்த்தி நாடுமுழுவதும் இன்று கோலாகலமாக கொண்டாடப்படுகிறது.

இதனையொட்டி, குடியரசுத்தலைவர் திருமதி. திரௌபதி முர்மு, பிரதமர் திரு. நரேந்திர மோடி, மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா, மத்திய இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் உள்ளிட்ட தலைவர்கள் நாட்டு மக்களுக்கு வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

பிரதமர் திரு. நரேந்திர மோடி வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தியில், இந்த நன்னாளில் மக்கள் அனைவரும் மகிழ்ச்சியும், அமைதியும், ஆரோக்கியமும் பெற தாம் பிரார்த்திப்பதாக தெரிவித்துள்ளார்.

தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் விநாயகர் சதுர்த்தி உற்சாகத்துடன் கொண்டாடப்பட்டு வருகிறது.

பிள்ளையார்பட்டி, திருச்சி மலைக்கோட்டை, பரமத்தி வேலூர் உள்ளிட்ட பல்வேறு விநாயகர் கோவில்களில் சிறப்பு பூஜைகள் நடைபெற்றதாக எமது செய்தியாளர்கள் தெரிவிக்கின்றனர்.

>>>>><<<<<

கிராமப்புற இளையோர் சுயதொழில் பயிற்சி பெற்று, தொழில் முனைவோராக உருவெடுக்கும் வகையில் பல்வேறு திட்டங்களை மத்திய-மாநில அரசுகள் செயல்படுத்தி வருகின்றன.

அதன் ஒரு பகுதியாக, கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் மத்திய-மாநில அரசுகள் இணைந்து, சுயவேலைவாய்ப்பு பயிற்சி வகுப்புகளுக்கு ஏற்பாடு செய்துள்ளன.

இந்தியன் வங்கி மூலமாக வழங்கப்படும் இந்த பயிற்சியானது, பல்வேறு பிரிவுகளில் இளைஞர்கள் வேலைவாய்ப்பினை பெற உதவும் என்று மாவட்ட முன்னோடி வங்கி மேலாளர் திரு. ரஞ்சித் குமார் எமது செய்தியாளரிடம் தெரிவித்தார்.

(சவுண்ட் பைட் – ரஞ்சித் குமார் 30 செகண்ட்ஸ்)

c/o.இந்தப் பயிற்சி, புதிதாக தொழில் தொடங்குவதற்கான நம்பிக்கையை தந்திருப்பதாக பயனாளி ஒருவர் தெரிவித்தார்.

(சவுண்ட் பைட் – பயனாளி 30 செகண்ட்ஸ்)

>>>>><<<<<

பாதுகாப்பு கவுன்சிலில் மேற்கொள்ளப்பட வேண்டிய சீர்திருத்தம் குறித்த பேச்சுக்களை ஐ.நா. பொதுச்சபை 17வது முறையாக ஒத்தி வைத்துள்ளது.

இதற்கு இந்தியா, பிரேஸில், ஜெர்மனி, ஜப்பான் ஆகிய ஜி.4 நாடுகள் கண்டனம் தெரிவித்துள்ளன.

இந்த தாமதம், ஐ.நா சபை மீதான உலக நாடுகளின் நம்பிக்கையை சீர்குலைப்பதாகவும், சர்வதேச அளவில் நாடுகளை ஒருங்கிணைக்கும் அந்த அமைப்பின் திறன் கேள்விக்கு உள்ளாகியுள்ளதாகவும் அந்நாடுகள் கூறியுள்ளன.

*ஜி.4 நாடுகள் சார்பாக கருத்து தெரிவித்துள்ள ஜப்பான் அமைச்சர் திரு. Iriya Takayuki, பாதுகாப்பு கவுன்சில் சீர்திருத்தம் தொடர்பான பேச்சுக்கள் தொடர்ந்து தோல்வியை கண்டு வருவதாக தெரிவித்துள்ளார்.*

*பாதுகாப்பு கவுன்சிலில் நிரந்தரமாக மற்றும் தற்காலிகமாக இடம்பெறும் நாடுகளின் எண்ணிக்கையை அதிகரிக்க வேண்டும் என்று ஜி.4 நாடுகள் தொடர்ந்து வலியுறுத்தி வருவது குறிப்பிடத்தக்கது.*

*>>>>><<<<<*

*உலக பேட்மிண்டன் சாம்பியன் போட்டியில் இந்தியாவின் எச்.எஸ். பிரணாய், பி.வி. சிந்து ஆகியோர் இரண்டாவது சுற்றுக்கு முன்னேறியுள்ளனர்.*

*பாரிஸில் நடைபெற்று வரும் இப்போட்டியின் ஆடவர் ஒற்றையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் எச்.எஸ். பிரணாய், 21-18. 21-15 என்ற செட்கணக்கில் ஃபின்லாந்தின் Joakim Oldoff-ஐ வென்றார்.*

*மகளிர் ஒற்றையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் பி.வி. சிந்து, 23-21. 21-6 என்ற செட்கணக்கில் பல்கேரியாவின் Nelbantoba-வை வென்று இரண்டாவது சுற்றுக்கு முன்னேறினார்.*

*இப்போட்டியின் கலப்பு இரட்டையர் பிரிவில் ரோஹன் கபூர் – ருத்விகா இணையும் இரண்டாவது சுற்றுக்கு முன்னேறியுள்ளது.*

*>>>>><<<<<*

*ஐபிஎல் கிரிக்கெட் போட்டிகளிலிருந்து ஓய்வு பெறுவதாக அஸ்வின் ரவிச்சந்திரன் அறிவித்துள்ளார்.*

*டெஸ்ட் ஒருநாள் மற்றும் டிவெண்டி டிவெண்டி சர்வதேச போட்டிகளிலிருந்து ஏற்கனவே ஓய்வுபெறுவதாக தெரிவித்திருந்த நிலையில் அவர் இம்முடிவினை இன்று வெளியிட்டுள்ளார்.*

*>>>>><<<<<*

*சீனாவில் நடைபெற்று வரும் சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் விஷ்ணுவர்தன் – தென்கொரியாவின் Yong Han இணை காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.*

*>>>>>END<<<<<*